


Land Transport Authority Public Transport Council

# 3 ஜூலை 2010 முதல் தூர அடிப்படையிலான கட்டணங்கள்.

அனைவரும் கூடிய விரைவில் பயண-மாறுதலுக்கான கூடுதல் கட்டணமின்றி தொல்லையற்ற பயணத்தை அனுபவிக்கலாம்! தூர அடிப்படையிலான கட்டணங்களின் முழுப் பலனையும் அனுபவித்திட, மூத்த குடிமக்கள் மற்றும் மாணவர் சலுகை அட்டைகள் வைத்திருப்போர் உட்பட, அனைவரும் எப்போதும் ஏறும்போதும் இறங்கும்போதும் மறக்காமல் அட்டையைத் தட்டவேண்டும்.




3 ஜூலை 2010 முதல், பயணிகள் அனைவரும் பேருந்து, இலகு இரயில், பெருவிரைவு இரயில் ஆகியவற்றில் பயணம் செய்த தூரத்தின் அடிப்படையில் கட்டணம் விதிக்கப்படும். தூர அடிப்படையிலான கட்டணங்களுடன், உங்கள் பயணத்தின் ஒவ்வொரு பயண-மாறுதலுக்கும் கூடுதல் கட்டணம் விதிக்காமல், மொத்த பயண தூரத்தின் அடிப்படையில் கட்டணம் கணக்கிடப்படும். மூத்த குடிமக்கள் சலுகைக் கட்டணத்தை அனுபவித்திட வார நாட்களில் காலை 9 மணிக்குமேல் பயணத்தைத் தொடங்கவேண்டும். அதோடு, ஏறும்போதும் இறங்கும்போதும் மறக்காமல் எப்போதும் அட்டையைத் தட்டவேண்டும். முதல் 7.2 கிலோமீட்டர் பயணத்திற்குப் பிறகு அவர்கள் ஒரே விலைக் கட்டணத்தை அனுபவிக்கலாம்.

**ஏறும்போதும் இறங்கும்போதும் மறக்காமல் அட்டையைத் தட்டுங்கள்**

இறங்கும்போது நீங்கள் அட்டையைத் தட்ட மறந்தால் அதிகபட்சக் கட்டணம் விதிக்கப்படும்.



## தூர அடிப்படையிலான கட்டணங்களுடன் உங்கள் பயணப்பாதையை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.









*வழக்கமான கட்டணம் நடப்புக்கு வந்தபிறகு.

தூர அடிப்படையிலான கட்டண முறையைப் பற்றி மேல்விவரம் அறிய:

**Land Transport Authority**
1800-CALL LTA (1800-225 5582)
www.lta.gov.sg

**SBS Transit**
1800-287 2727
www.sbstransit.com.sg

**SMRT**
1800-336 8900
www.smrt.com.sg

**TransitLink**
1800-225 5663
www.transitlink.com.sg